உ

கடவுள் துணை.

விஷநிவர்த்தி.



இவை சிறுமணவூர்.
முனிசாமிமுதலியாரா லியற்றப்பட்டு.

ஆ-இரத்தினவேலுமுதலியாரது
வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1897.

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெம்பர் வீடு.

உ

கடவுள் துணை.

விஷ நிவர்த்தி.

தேள் விஷத்திற்கு.

தேளது தீண்டிக் கண்ணீர் தேம்பியே வந்தபேர்க்கு
மீளவே வெங்காயத்தை மெத்தனக் கசக்கிச் சாறு
தாளவே வலிப்பிரண்டில் தாக்கிடத் துளிதான் மூன்று
வேளனவிஷந்தானந்த வேளையில் நீங்கும்பாரே.

இதுவுந் தேளுக்கு வேறுமுறை.

நீக்கவே யின்னமொரு முறைதான் கேளு
நல்லெண்ணெய் சிறுக்கரண்டி தூக்கிக்கொண்டு
ஒக்கியே தேள்கொட்டும் வாயிலேதான்
ஒவ்வொரு துளியாக விட்டுவிட்டு
தாங்கவே அரைக்கியத்தை தேய்க்கச் சொல்லு
தளருமடா விஷமெல்லாந் தாங்காதோடும்
பாங்கான இருமுறையும் வெளியாய்ச் சொன்னேன்
பக்குவமாயின்னமொரு முறையுங் கேளே.

இதுவுந் தேளுக்கு வேறுமுறை.

முறைபிசகிடாதே முன்னவருரைத்தவாக்கு
நிறைபெறு தேளுக்கெல்லாம் சத்துரு தெரிந்துக்கொள்ளு
மறைந்திடும் பொட்டிலுப்பை வாங்கி நீரால் குழைத்து
செறிந்திடுங் கடிக்கவாயில் யேந்திநீ காய்ச்சிடாயே.

இதுவுந் தேளுக்கு.

வசனம். உப்பு வெத்திலை மிளகு மூன்றையும் அரைத்து கொட்டின வாயில் தேய்க்க விஷமிறங்கும்.

நண்டுதெருக்காய் கடிக்கு.

நன்றதெருக்காய் கடித்த விஷந்தான் மீள
நவிலுகிறேன் சூக்ஷமதை நயபவேணும்
சென்றவொரு தேளுக்கு உரைத்த வஸ்து
திடமான பொட்டிலுப்பை கொண்டுவந்து
நன்றவொரு தண்ணீரில் குழைத்துப்பூசி
மெத்தனவே யனல்காட்டிச் சுட்டாயானால்
வென்றதடா விஷமெல்லாம் தொலைந்துபோச்சு
வெந்துதென்றால் நல்லெண்ணெய் தடவியாற்றே.

எலி கடிக்கு.

எலிகடிதான் உடம்பிலே ஏறினக்கால்
யெவ்வளவோ தொந்தரைகள் செய்யும்பாரு
சலியாதே கெச்சக்காயிலையின் சாறு
சமமாக வெள்ளெண்ணெய் கலந்துகொண்டு

வலியவே மூன்றுநாள் குடித்தாயானால்
வாங்குமடா வெளியென்ற விஷங்களெல்லாம்
பலியாதென் றலட்சியமாய் சொன்னபேர்க்கு
பலியாது நம்பினால் கெலிக்கும்பாரே.

பதினெட்டு எலிகடிக்கும்

பாரப்பா பதினெட்டு எலிகடிக்கும்
பாங்கான கரும்பூனை மலத்தைவாங்கி
சேரப்பா பனையோலை சுட்டிவெல்லாம்
சமனாகச் சேர்த்தரைத்து புன்னைக்காய்போல்
தூரப்பா மூன்றுநாளாறுவேளை
தோர்க்காமல் உள்ளுக்கு கொண்டாயானால்
தோப்பா விஷமெல்லாந் தலைக்குமோச்சு
வெளிவாகப் பத்தியந்தான் தெரிந்துகொள்ளே.

பத்தியம்.

தெரிந்துகொள் உப்புபுளி புகையுங்காமம்
தேடாதே ஆறுநாள் காறுகாறு
பிரிந்திட்ட ஏழாநாள் தலையைமூழ்கு
பக்குவமாய் உப்புபுளி சுட்டுசுட்டு
அரிந்தந்தப் படிசெய்து கெலித்துக்கொண்டு
உப்பனை வெட்டாநாளெல்லாங்கூட்டு
பரிந்துடம்பில் நாள்சென்று போச்சுதானால்
பதராதே மூன்றுகெடுக் கொண்டுதீரே.

பூனைகடிக்கு.

தீர்க்கவே பூனையுட விஷத்துக்கப்பா
புகலுவேன் மருந்தொன்று புத்திநாட்டு
கார்க்கவே குப்பையுட மேனிப்பட்டை
காராவின் பாலாலே அரைத்துக்கொண்டு
தேர்க்கவே மூன்றுநாளாறுவேளை
தின்றப்பா பத்தியமுன் போலேகாறு
ஆர்க்கவே நீவிலே ரணாத்திரண்டு
ஆறுநாள் கடிவாயில் பூசுவாயே.

செய்யான் கடிக்கு.

பாரப்பா செய்யான்தான் கடித்தபேர்க்கு
பண்பான *வாகாய கெருடன்மூலம்* மூலம்-கிழங்கு
நேரப்பா பாக்களவு கொள்ளச்சொல்லி
நெற்றியெதிர் மயிலிறகு புகையை மாட்டு
ஆரப்பா விஷாகலை தென்று சொல்வார்
ஆகரா கதிர்கண்ட பனிபோலோடும்
தேரப்பா பூரான்தான் கடித்தபேர்க்கு
தீட்டுகிறேன் எழுமுறையை தெரிந்துகொள்ளே.

பூரான் கடிக்கு.

தானென்ற பூராந்தான் கடித்தபேர்க்கு
தக்கதாம் யெருக்கம்பூ நாய்வேளைப்போக்கி
நாமென்ற பூவோடு உள்ளுக்கேத்தி
நம்பியே நாய்மலத்தின் புகையைக்காட்டு
வேமென்ற நாள்சென்றால் மண்டலந்தான்
விதமாகப் பதத்தியந்தா னில்லைபாரு
காமென்ற விடமெல்லாம் தீர்ந்துப்போகும்
கதிப்பான தடிப்பெல்லாம் மாறிப்போமே.

பாம்பு கடிக்கு.

ஆமடா தும்பையிலை ரசந்தான் மைந்தா
அழாக்கில் கெருடனிடக் கிழங் கரைத்து
வேமடா நற்பாம்பு கடித்த பேர்க்கு
விள்ளாமல் உள்ளுக்குக் கொடுத்துப் போடு
போமடா விஷமெல்லாந் துலைந்துப் போகும்
பொசிப்புண்டு தூங்கிறைபோல் லெழுந்திருப்பான்
நாமடா யிந்தமுறை வெளியாய்ச் சொன்னோம்
நம்பாமல் வம்பென்றால் நாமென் செய்வோம்

இதுவும் பாம்புக்கு.

தானென்ற வசம்புதான் பலங்காலப்பா
திரமான புகையிலையில் பலமரிக்கால
வானென்ற *சிறுநீர்விட் டடித்துக்கொண்டு
வெண்மகனே அழாக்கு ரசம்பிழிந்து
மானென்ற நற்பாம்பு கடித்தபேர்க்கு
மயங்காமல் உள்ளுக்குக் கொடுத்துப்போடு
நானென்ற சரணைதா னில்லாவிட்டால்
நலமான பாலரை தன்னுல்வாமோ.

சர்ப்பவிஷத்திற்கு சோதனைவேர் கொண்டிச்சிந்து.

சோதனை பங்கப்பாளை வேரினைத்
துய்க்கக்கச்சி விலேலைக் தொடர்விஷமே
போதவே யினித்ததென்றால் நல்லபாம்பு
புளிக்கில்விழலை துவர்த்திடில் விரியன்
கார்த்திடில் மயக்காவாம்- உவர்த்திடில்
கனைத்தபுடையன் யிளசெனில் மண்டலி
நேர்த்தியதாகவே தாம்-நாக்கினில்
நினறுகடுக்கில் கெடுமூக்கனமே.

---

*பெண்களுக்கு ஆண்சிறுநீர்விட் டடிக்கவும ஆணுக்கு பெண்சிறுநீர்விட் டடிக்கவும்.

சர்ப்பத்துக்கெல்லாம் நசியம்.

இப்படி மறிந்திடு நீ இசைபவே எல்லா விஷங்களுக்குமே நசியம்செப்பவுங் கேளணங்கே வெற்றிலைசிறியாநங்கு கறியுப்புங் கசக்கி கண் செவி மூக்கிற்பிழிய உடல்விட்டுவிண்புகுந்திட்டவுயிர் மீண்டுவருமே பண்ணிகர்மொழியணமே முருக்கிலை பகருமெருக்கிலை தும்பையிலையும் பிழிந்திடு நாசிதன்னில் விட்டுக்கழிர்தவும்பிரும்வந்து கலந்திடுமே குளிர்ந்திடுந்துளசியிலை தும்பையிலை கொடியபிரண்டை கறியுப்புங்கசக்கி நாசியிற் பிழிந்திடவே உயிர்விட்டுப் பேசிடாதிருந்திடப் பிணமெழ வீசியமுதல்வேகம் கண் சிவக்கில் வெள்ளெருக்கின் பெருமரப்பட்டை வசம்புமிறைப்பட்டை சிறுநீர்விட்டிடித்து பிழிந்திடும் மூக்கில் விஷமொழிந்திடுமே ஆறைவிரண்டு மூன்றுவேகத்திற்கு அழலுமிளகு சுக்குக்கடுகிக் திப்பு சாரணை வெற்றிலையும் ஒன்றாகத்தட்டிநசியம்பண்ணிவிட்டோடுமே காரணமான வேகம் எட்டெனும் அதிவேகம் வந்தெழுந்து மதிமயங்கில் கெந்தகமுள்ளிவசம்பு மிளகுடன் கொடியானதும்பையிலை துளசியிலை தடுத்திடும் முலைப்பாலும் நாசியில் தட்டி நசியஞ் செய்யக்கெட்டோடும் சிறக்கும்பெருமரப்பட்டை தைவேளை சேர்த்துடன் எருக்கம்பால் வார்த்தரைத்து சற்குந் துணியிற்றடவி யுலர்த்திச் சிறுநீர்விட்டு நாசியிலிடப் பார்விட்டோடுமே.

மயக்கரவுகடிக்குமருந்து

தலைப்படு மயக்கரவன் கடித்திடில் தங்குகறிப் பாலையின் வேர் தூங்கவிஷம்போம் பயப்படுமிளகு பொடிசாய்ந்த வோட்டில்படுத்தி முகத்திற் புகை கொடுப்பதுமாம் செயப்படு விரியனெனும் அரவன்செனித்திடு மிடத்திலைச் செப்புகிறேன் நாரணன்சோதரியாள் திரிலோகநாயகி பருவதராயனன்மகளாம் காரணிபஞ்சபாணி திரிபுரை கருணை தருணிவீரி கங்காளி செகத்திலெண்ணுள் காமுபனார்த்தெனும் மகத்தவம் பெறறிருக்கு மகமாயை இடத்திலடியவர்க்குச் செல்வமும் பரத்திற்கதியுமருள் பகவதிநீள் குஞ்சரமுகமுடையான் தனையுங்குகனையும் பெற்றெடுத்த கொற்றவைநான் பஞ்சினுமெல்லியதாய்ச் சிவந்திடு செஞ்சிலம் புனைபிய சீரடியாள் மருகவனத்தி னூறைபும் ஈசர்தம் வாமத்திலிருந்திடுமகராசி சுருதியின்முடிவில் நின்ற திருபிகுசுந்தரிகிரந்தரி தாரகரியாள் அழகியநாயகியாள் திருவளை ஆடையிற்றேய்ந்திடு இரக்கத்தமதில் விழவுடனே பிறந்துவளர்ந்திட்டு விரியனெனப்பெயர்கொண் டெரிதவமுமகாணமுற்றுந் திரியுகின்ற உரகததின்கடிக்குநசியமதுகழறுகிறேன்.

விரியன்கடிக்குமருந்து.

தேன்முட்டி யிலைநசிகம் விட்டுடன் திரும்பவரைத்துப் பூசத்தீரும விஷமே உள்ளுக்கும் பெறுவாகைப்பட்டைச்சார் உழ

க்கு செய்யாமற்கொடுக்கிறதினது விள்ளுமோர் காற்பலமும்பொடிசெய்து விரவிக்கொடுக்க விஷமீண்டிடுமே கசந்திடும்பாகலிலையின் சாறு நக்கால்படியிற் கால்பலமினைக் கரைத்து விரைந்துடன் கரைத்துட்கொள்ள உடலதுபசக்கவிரியன் விஷம் பறந்திடுமே ஆப்பிலைபரைக்கதுபோல் விரியன்பல அழுந்தக்கடித்து விஷமகிகரித்தால் வேப்பெண்ணெய் யாழாக்குக் கொடுத்திட மீண்டிடுங் கடிவாயின் வீக்கமும்போம் ஆழன்வலிபாலே விரியன் உரத்துக்கடித்தவிஷஞ் சிறக்கிற்கொண்டால் வீழியின் பழமரைத்துப் பசுவிலவெண்ணெய்தனிலருந்த மீண்டிடுமே சதிராங்கைத்தடுபோல் விரியன் கண்டிக்கடித்து விஷமூண்டுகொண்டால் சித்திரமூலியின்வேர் பொடிசெய்து தேனுவின்பாலிற் கொள்ளத் தீர்ந்திடுமே.

முதலைவேங்கை இவைகளின்கடிக்கு மருந்து.

நாய் வானரம் பூனை தாரகம் நரி சிறுபுலி கரா பெருவேங்கை தீபனிவ்வெட்டுவகையும் கடித்திடில் தேடிக்கலி வேராவின்பாலிலரைத்தே மூன்றுநாளருந்திடவே ஓடிடும் மூர்க்கமிலிந்தசோர்வு கடித்ததென்றால்.

சோர்வுக்கு மருந்து.

வன்றியபனைவெல்லத்தில் எருக்கம்பால் ஓரேழுதுளிவிட்டு உண்ணவேழுநாள் அகன்றிடுங் கருஞ்சோர்வு கடித்திட்டு அங்கத்திற் கறுப்புற்றுத் தடித்ததென்றால் சுகந்தனேரிவரும்புங்கின்வேர் சொல்லுஞ் சிறியாநங்கை வெருகுபாலில் கலந்துண்ண மூன்று தினம் நீங்கிடும் கனற்றும் பெருஞ் செய்யான் கடித்ததென்றால்.

செய்யான்கடிக்குமருந்து.

கம்பெறு கோவைபிலை வெற்றிலை நல்லபருத்தி கொஞ்சி உத்தாமணி களங்கமில முடக்கறுத்தான் இவையாறும் கசக்கிச் சாறுபிழிந்து காய்ச்சித தடவக் குளிர்ந்திடுங் கடுப்பெரிப்புந் தம்பலம்கொட்டு வாயிலுமிழுந்தாலும் விட்டுவிடுமே தூதுவேளை காவலண்டை வேரரைத்துச் சுற்றிகடிவாய்தனிற் பற்றித்தடவ தீதுற்றசெய்யான் விஷம் உடன்விட்டுச் சென்றிடுமென்றுரைத்தார் கெண்டைவிழியே

ஆறுபுள்ளிவண்டுகடித்தே கடுத்தெரிப்பாகில் பழங்காடியிற் பாவிலையை மாறிடவேகவைத்து ஆவியை வாகாக்கடிவாயிற் கட்டவாங்கும் விஷமேசர்சக்கொன்றை வேரரைத்துப் பாலினில் சாப்பிடக்கொடு விஷந்தானகலுமே.

காட்டட்டைகடிக்கு.

தெருக்குற்ற வனத்தினட்டை, கடித்திடில் நெரும்புனமுருங்கை சூரியன்வேர் ஆகிலாவேர்ப்பட்டைத் தைலத்தில் அரைத்துக்கொடுக்க விஷந்தானகலுமே.

தேள்கடிக்கு மருந்து.

விஷ தேளினுக்குக் கோழியெச்சம் வெற்றிலையிற்கொடுக்க விஷமகலும் கொல்லன்கோவைக்கிழங்கரைத்துக் கொடுத்திடக்கொடிதான கருந்தேளின் விஷமாறுமே நல்லவெள்ளெருக்கம்பால் சிலையில்நனைத்து மயிலிறகு தனிற்சுற்றியே கோழியெச்சம் பேற்றடவிவைத்துலர்த்தி கொடியபன்னிதேள் கொட்டினுமவ்வேளையிற்றீக்கொளுத்தி கொட்டுவாயில் மெல்லப்புகைக்க விஷமில்லை கடுப்புங்கண்டுவாய்க்கட்டிட விஷந்தணியும் எட்டி விதை கழற்சிக்காய் பிரமாணமிழைத்துப்பூச கடுப்புடனெரிப்படங்கும் பழம்புளி காடி தனிற்கரைத்தொரு பாண்டத்திலிட்டு அடுப்பினிற்கொதிக்கவைத்து கொட்டுவாயில் ஆவிபிடிக்க விஷம்போய்விடுமே ஆகாசத்தூளை பெருமைச்சாணிப்பால் விட்டரைத்துக் கொதிக்கவை கடிவாயிலரிதாகின்னளவெடுத்துப்பூசிடில் நின்றிடுங்கடுப்பெரிப் பகன்றிடுமே *கொல்லன்கோவைக்கிழங்கு ஆகாச கெருடன்கிழங்கு

எலிகளின்பெருச்சாளிகளின் கடிக்குமருந்து.

எலிகுலம் பதினெண்வகை அவைகளை
இயம்புகிறேனெவர்க்கும் நயம்பெறவே
வலித்துங்கத்திரி மணியன் செம்மூக்கன்
வள்ளிக்குரட்டை கருங்காற் நலையன்
விடவெலி செந்தலைமுத்தி செவ்வெலி
வீங்கெலி உவர்ப்பெலி தூங்கெலியும்
புனட்டெலி இரைப்பெலியும செங்கண்ணன்
புள்ளிகாடன் குறுங்காலெலியும
நல்லெலி யிவராம் பதும் கடித்திட்டு
நாளுளுமே விஷந்தானேறில்
பச்சையா தளிர் ஒருபத்து
பாலிலரைத் தருந்திடக் கலுமே
ஊமத்தம்வறுகு கொணர்ந்திடித்ததை
ஒருபாண்டமதனில் வைத்தொரு இடங்கில்
நேரித்த தனையிருத்திக் கழுத்தின்கீழ்
நீடுகுழி வாய்மறைய மூடிவிட்டுப்
பக்கத்தில் நாள்வழிபோல் பதறிதகந்தப்
பாண்டத்தில் கீழனல் மூண்டிடச்செய்து
தொக்கினிற் புகைத்திடவே எலிவிஷம்
கக்கியிர்வுடனே கழிந்திடுமே.

வண்டுகடிக்கு மருந்து.

வண்டுகடி வெகுவிதமாம் அதற்கெல்லாம்
வண்டுகொல்லி மரப்பட்டை மையோலரைத்துக்

விஷநிவர்த்தி.

சொன்னபுன்னைக் காயளவு நாளொட்டுக்
கொடுத்திட வண்டுகடி விட்டோடுமே
சயந்திகழ் பங்கப்பாலை வேரினைக்
காசிடை யரைத்தினங் கடிதருந்தப்
பயந்திடும் வண்டுகள் சங்கினா
பருத்தியின் வேரின்சாறு முருக்கினெற்றும்
அளவிட்டு நாளருந்தி உப்புபுளி
அகற்றிடில் வண்டுகடி திகைத்திடுமே.

வீங்குமண்டலிகடிக்கு மருந்து.

வீங்கமண்டலி கடித்ததே கடிவாயில்
வீங்கி யெழுச்சாவே ரூறைவரும்
தாங்கிய புங்கின்வேரும் இண்டைவேர்
தக்காளி வேரிலுப்பை வேருங்கூட்டி
அரைநீரிட்டரைத்தெடுத்துப் பூசிட
அலர்ந்திடும் வீக்கம தொழிந்திடுமே.

பச்சோந்திகடிக்கு மருந்து.

பச்சோந்தி கடித்திடனே கற்றாழை பண்ணைபாட்டை இலை கண்ணுந்தருநீர் மிச்சமாய்விட்டரைத்துக் காடியிலெள்ளாப்பூசியாக்கில தெள்ளுப்பொடியை வெண்ணெய்த்தனிலிட்டுக்காய்ச்சி நாசியினில்விடுத்து வீக்கத்திற்றடவக்குணமாம்.

நாய்கடிக்கு மருந்து.

மண்ணின்மிசை நாய்கடித்தால் ஆகுமருந்து நன்னாரி வேர்காரந்தைஇலை உப்பெள்ளுப்புகையூரல் சிவக்கநாயுருவிவகை யாதுமொன்றுபடுத்தி செப்பமாயரைத்ததனைப் பூசியே உப்புச் சுண்ணாம்பில் வைத்துப்பின் கவறுத்தொக்கிக் கட்ட நாயின் பற்பட்ட வாயிற்கடுப்புத் தணிந்தேகும் விஷம்.

காட்டுத்தவளைகடிக்கு மருந்து.

கறுத்திடுங் காட்டுத்தவளை-கடித்திடல் தருநிச் சொறியெழுப்பிற் சரியன்பொடி சமஞ்சிரண்டசத்தியிலேச் சாறுநருகாற்படிதன்னிலிட்டுக் காய்ச்சருந்திப் பழம்புளைத்தாரு முப்புமேயொழிபின்பருத்தியினிலைச்சாற்று லைாதுதிடப்போம்.

அரணைநக்கலுக்கு மருந்து.

கர்க்கடமேனியிலரணை உடல்முற்றும் நடுங்கிவெண்ணுவோள்ளி நாக்குத்தடிக்கில் சுக்கொடுவசம்பெடுத்துச் சுட்டுப்பின் சூரணித்தருந்திலுஞ் சாரணைவேர் துவைத்ததன் சாறுடப்பிற்-பூசிலுமொதாலையுங் குருந்துபனங்தோல்வேரும் வைத்தருந்திடதரணைவிஷமெல்லாந் துடித்தொடுங்கிடும்நாக்குத்தடித்துப்போம்

விஷநிவர்த்தி - முற்றிற்று.